## இயல் 7.2 - அளவைகள்

பயிற்சி எண் :: 7.2.1.2.A

அளவைகள் - நாற்கரங்கள் (Quadrilaterals) - வரையறை


## அளவைகள் - நாற்கரங்கள் (Quadrilaterals) - வரையறை

1. நான்கு நேர்கோட்டுத்துண்டுகளை பக்கங்களாகக்கொண்ட அனைத்து மூடிய வடிவங்களும் நாற்கரம் (Quadrilateral) எனப்படும்.
2. அவற்றுள் செவ்வகம் (Rectangle), சதுரம் (Square) போன்ற வடிவங்கள் நாம் அறிந்தவையே ! . . .
3. இணைகரம் (Parallelogram), சாய்சதுரம் (Rhombus) மற்றும் சரிவகம் (Trapezium) போன்ற நாற்கரங்களின் வரையறைகளை இனி வரும் 3 பாடங்களில் காணலாம்.


## அளவைகள் - இணைகரம் (parallelogram) - வரையறை

கீழ்காணும் பண்புகள் உடைய ஒரு வடிவம் **இணைகரம் (parallelogram)** எனப்படும்.


1. 4 நேர்கோட்டுத் துண்டுகளை பக்கங்களாகக் கொண்ட ஒரு **மூடிய வடிவம்** (Closed shape).
2. எதிரெதிர் பக்கங்கள் **இணை கோடுகள்** (Parallel Lines). $\overline{AB} \parallel \overline{DC}$ மற்றும் $\overline{AD} \parallel \overline{BC}$.
3. எதிரெதிர் பக்கங்கள் **சம நீளம்** உடையவை (Equal Length). $\overline{AB} = \overline{DC}$ மற்றும் $\overline{AD} = \overline{BC}$




இணைகரம் **எத்திசையை** நோக்கியும் அமையலாம்




இணைகரத்தின் பிற பண்புகள்




எதிரெதிர் கோணங்கள் சமம்


$\angle ABC = \angle CDA$

$\angle DAB = \angle BCD$




எதிரெதிர் மூலைகளை இணைக்கும் விட்டங்கள் ஒன்றை ஒன்று இருசமக்கூறிடும்.


$\overline{AE} = \overline{EC}$ and $\overline{DE} = \overline{EB}$




அடுத்தடுத்த கோணங்கள் மிகை நிரப்புக்கோணங்கள்

$\angle A + \angle B = 180^\circ$ | $\angle A + \angle D = 180^\circ$

$\angle C + \angle B = 180^\circ$ | $\angle C + \angle D = 180^\circ$




எல்லாக்கோணங்களின் கூடுதல் 360 ஆகும்.

$\angle A + \angle B + \angle C + \angle D = 360^\circ$


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 29th June, 2022 :: 11:11 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.